TAMILTH Madurai 1 Regional_01 M. SARAVANAKUMAR 222206 50415



# நகரில் நடப்பவை

**மதுரை**

- மாவட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் 2-ம் நாள், பள்ளிக் கல்வித் துறை, எம்ஜிஆர் விளையாட்டரங்கு, காலை 10.
- சர்வ சமய அமைதிப் பிரார்த்தனை, செப்சிரா, சேவாலயம் மாணவர் இல்லம், ஷெனாய் நகர், மாலை 6.
- கொலு பொம்மை சிறப்புக் கண்காட்சி 24-ம் நாள், பூம்புகார் விற்பனை நிலையம், சிட்கோ தொழில் வளாகம், மேலூர் சாலை, காலை 10.
- ஆன்மிக இலக்கியச் சொற்பொழிவு, மதுரை திருவள்ளுவர் கழகம், தலைப்பு-திருக்குறள், பேசுபவர்-தயாபரன், வடக்காடி வீதி, மாலை 6.
- பண்பாட்டு இலக்கிய நிகழ்வு, திருவள்ளுவர் மன்றம், தலைப்பு-திருமந்திரம், பேசுபவர்-திருமாவளவன், சக்தி வேலம்மாள் நகர், மாலை 5.
- ஆன்மிகச் சொற்பொழிவு: ஸ்ரீ பாலாம்பிகை அருட்குடில், தலைப்பு- செல்வமும் செருக்கும் மகாலட்சுமியின் பாடம், பேசுபவர்- இ.ராமகிருஷ்ணன், திருப்பரங்குன்றம், மாலை 6.

**நவராத்திரி விழா 6-ம் நாள்**

- மீனாட்சி அம்மன் கோயில், திருமுறை இன்னிசை, காலை 8, ஊஞ்சல் திருக்கோலம், மாலை 6.
- கள்ளழகர் கோயில், சுந்தரவல்லி தாயார் புறப்பாடு, அழகர்கோவில், மாலை 5.10.
- திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில், தபசு காட்சி, மாலை 6.
- சர்வேஸ்வரர் கோயில், சிறப்பு அலங்காரம், அண்ணா நகர், மாலை 6.
- கோமதி அம்பிகை சமேத சங்கரலிங்கம் சுவாமி கோயில், சிறப்பு அலங்காரம், தும்பைப்பட்டி சிவாலயபுரம், மாலை 4.30.
- மகா துர்க்கையம்மன் கோயில், காமாட்சி அலங்காரம், சி.புளியங்குளம், மாலை 6.

**பழநி**

- நவராத்திரி விழா 6-ம் நாள்: பழநி பெரியநாயகியம்மன் கோயில், சிறப்பு அபிஷேகம், மாலை 6, சிறப்பு அலங்காரம் மற்றும் ஆராதனை, இரவு 7.

### பள்ளி கல்வித்துறை சார்பில்

# மாவட்ட அளவில் குடியரசு தின விளையாட்டு போட்டிகள்

■ மதுரை

மதுரை மாவட்ட பள்ளிக் கல்வித்துறை சார்பில், மாவட்ட அளவிலான 14, 17, 19 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான குடியரசு தின தடகள விளையாட்டுப் போட்டிகள், எம்ஜிஆர் விளையாட்டு அரங்கத்தில் நேற்று தொடங்கின.

இதற்கு, மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமை வகித்தார். சட்டப்பேரவை உறுப்பினர்கள் அ.கல்லாணை, சோ.கார்த்திகேயன், துணை மேயர் தி.நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சு.தயாளன் வரவேற்றார்.



மதுரை எம்ஜிஆர் விளையாட்டரங்கில் நடந்த மாவட்ட அளவிலான தடகளப் போட்டியில் பங்கேற்ற மாணவியர்.

படம்: நா.தங்கரத்தினம்

மாணவ, மாணவிகளுக்கான குடியரசு தின தடகள விளையாட்டுப் போட்டிகள் அக்.15, 16 தேதிகளில் நடைபெற்றன. இதில் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் என 547 பள்ளிகளைச் சேர்ந்த 802 மாணவிகள், 829 மாணவர்கள் என மொத்தம் 1,631 பேர் பங்கேற்கின்றனர். குறுவட்ட அளவில் தனிநபர் போட்டிகளில் 1, 2-ம் இடம் பெற்றவர்கள், குழு போட்டியில் (தொடர் ஓட்டம்) முதலிடம் பெற்றவர்கள் மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்றனர்.

இப்போட்டியில் 1, 2, 3-ம் இடம் பெறுவோருக்கு பதக்கம், சான்றிதழ் வழங்கப்படும். தனிநபர் போட்டிகளில் 1, 2-ம் இடம் பெறுவோர், குழு போட்டியில் முதலிடம் பெறுவோர் மாநிலப் போட்டியில் பங்கேற்கின்றனர். இதில், மண்டல முதுநிலை மேலாளர் பி.வேல் முருகன், மாவட்ட விளையாட்டு இளைஞர் நல அலுவலர் ஆ.முருகன், மாவட்டக் கல்வி அலுவலர்கள் பா.செந்தில் குமார், ம.கணேசன், அ.கார்மேகம், ரகுபதி, சி.முத்துப் பிள்ளை, மாநகராட்சி கல்வி அலுவலர் பெ.சரவணமுருகன் ஆகியோர் பங்கேற்றனர். மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் த.வினோத் போட்டிகளை ஒருங்கிணைத்தார்.

### இலவச பேருந்து திட்டத்தால் தொழில் பாதிப்பு

# தேனியில் ஆட்டோ தொழிலாளர்கள் தர்ணா

■ தேனி

வெற்றிப் பயணத் திட்டத்தால் தங்களின் வருவாய் வெகுவாய் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, தேனியில் ஆட்டோ ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் கடந்த அக்டோபர் 2 முதல் அரசுப் பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணிக்கும் வகையில், வெற்றிப் பயணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இத்திட்டத்தின் கீழ் இயங்கும் அரசுப் பேருந்துகளில் பயணிக்கும் ஆண்களுக்கும் கட்டணக் குறைப்பு செய்யப்பட்டதால், பொதுமக்கள் மத்தியில் இத்திட்டத்துக்கு வரவேற்பு கிடைத்துள்ளது. இதனால், பலரும் தனியார் மற்றும் கட்டணப் பேருந்துகளை புறக்கணித்து, வெற்றிப் பயணப் பேருந்துகளில் பயணிக்கும் நிலை அதிகரித்துள்ளது.



வெற்றிப் பயண திட்டத்தால் தங்களது வருவாய் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி தேனி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் போராட்டத்தில் ஈடுபட்ட ஆட்டோ தொழிலாளர்கள்.

இதனால், தங்களின் வாழ்வாதாரம் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, ஆட்டோ ஓட்டுநர்கள் தேனி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து அவர்கள் கூறுகையில், 'பெட்ரோல், உதிரிபாகங்கள் விலை அதிகரித்துவிட்டது. எளிய முறையான தொழில் என்பதால், பலரும் கடன் வாங்கி ஆட்டோ ஓட்டி வருகின்றனர். இந்நிலையில், பயணிகள் பலரும் அரசு பேருந்துகளிலேயே ஏறுவதால், எங்களின் வருவாய் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. வருமானம் குறைந்ததால் சிலர் தற்கொலை செய்யும் நிலையும் தொடர்கிறது.

எனவே, இத்திட்ட விதிமுறைகளில் மாற்றம் செய்ய வேண்டும்' என்றனர்.



தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மருந்தாளுநர்கள்.

# கொடைக்கானலில் பூண்டு கருத்தரங்கு

■ பழநி

கொடைக்கானல் அருகேயுள்ள மன்னவனூரில் பூண்டு பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

நிகழ்ச்சியில், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி பயிர் பாதுகாப்புத் துறைத் தலைவர் கல்பனா வரவேற்றார். கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர் சாந்தி, தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கினார்.

# தேனி மருத்துவ கல்லூரியில் மருந்தாளுநர்கள் ஆர்ப்பாட்டம்

■ ஆண்டிபட்டி

தேனி அரசு மருத்துவ கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர்கள் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் மூர்த்தி தலைமை வகிக்க, மாவட்டச் செயலாளர் ஜஸ்டின் சாக்ரடீஸ் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். அரசு ஊழியர் சங்கத்தின் துணைத் தலைவர் தமிழ்பரமன் மற்றும் நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் முத்துப்பாண்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மக்கள் நல்வாழ்வுத் துறையில் காலியாக உள்ள 1,200-க்கும் மேற்பட்ட மருந்தாளுநர் பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும். தலைமை மருந்தாளுநர் மற்றும் மருந்து கிடங்கு அலுவலர் ஊதிய முரண்பாடுகளைக் களைய வேண்டும். தமிழக அரசு அறிவித்துள்ள புதிய மருந்தியல் கல்லூரிகளில் போதகர் பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. மாவட்டப் பொருளாளர் சதீஷ் நன்றி கூறினார்.

# பள்ளிகளில் கலாம் பிறந்த நாள் விழா

■ திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

அப்துல் கலாமின் சாதனைகளைக் கூறும் வகையில் மாணவிகள் பங்கேற்ற ஊர்வலத்தை பள்ளித் தலைமை ஆசிரியர் செல்வராணி தொடங்கி வைத்தார்.

செம்பட்டி அருகே சேடபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில், 'இந்து தமிழ் திசை' நாளிதழில் வெளியான அப்துல் கலாம் குறித்த கட்டுரையை மாணவ, மாணவிகள் வாசித்தனர்.


**மாண்புமிகு கடன் வசூல் தீர்பாணையம், மதுரை**
**O.A.No.255 of 2026**

**உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட், அதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன் (Age-32),** எண்.19/1, தரைத்தளம், வார்டு எண்.71, பாண்டியராஜபுரம் மெயின் தெரு, பை பாஸ் ரோடு, மதுரை டவுன், மதுரை, தமிழ்நாடு-625016 ...மனுவாதி

எதிர்

1. **M/s பிரணவ் டிரேடர்ஸ் அதன் சார்பாக உரிமையாளர்: Mr.கார்த்திகேயன் A** எண்.22/W-11, 2வது தெற்கு தெரு, தேவாரம், தேனி, தமிழ்நாடு-625 530
2. **கார்த்திகேயன் A,** S/o.Mr.அறிவழகன் எண்.11/4/88, தெற்கு தெரு, தேவாரம், தேனி, தமிழ்நாடு-625 530
3. **Mrs.பிரியா K,** W/o.Mr.கார்த்திகேயன்.A எண்.11/4/88, தெற்கு தெரு, தேவாரம், தேனி, தமிழ்நாடு-625 530

....பிரதிவாதிகள்

**அறிவிப்பு**

விண்ணப்பதாரர் வங்கி-க்கு சேர வேண்டிய தொகையை, அதற்கான தற்போதைய மற்றும் எதிர்கால ஒப்பந்த வட்டி விகிதம், செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக, மாண்புமிகு, கடன் வசூல் தீர்ப்பாயம் மதுரை-ல் **O.A. எண் 255/2026-ஐ** தாக்கல் செய்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகள், **மாண்புமிகு, கடன் வசூல் தீர்ப்பாயம் மதுரை, BSNL Level-IV கட்டிடம், முதல் தளம், CTO வளாகம், தல்லாகுளம், மதுரை - 625002 முன்பாக, 03.11.2026 அன்று காலை 10.30 மணிக்கு** நேரடியாகவோ அல்லது முறையான அறிவுறுத்தலோடு வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி பதில் தெரிவித்து விண்ணப்பத்தில் கோரப்பட்ட நிவாரணத்தினை ஏன் வழங்கக்கூடாது என்பதற்கான தங்கள் தரப்பு காரண விளக்கத்தை தாக்கல் செய்யுமாறு கோரப்படுகிறது. தவறினால், வங்கியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் விண்ணப்பமானது சட்டப்படியான முறையில் விசாரிக்கப்பட்டு நீங்கள் இல்லாத நிலையிலும் ஒருதலைபட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

S.பாபு, B.Com, B.L., MBA., வழக்கறிஞர்

**மாண்புமிகு கடன் வசூல் தீர்பாணையம், மதுரை**
**O.A.No.256 of 2026**

**உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட், அதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன் (Age-32),** எண்.19/1, தரைத்தளம், வார்டு எண்.71, பாண்டியராஜபுரம் மெயின் தெரு, பை பாஸ் ரோடு, மதுரை டவுன், மதுரை, தமிழ்நாடு-625016 ...மனுவாதி

எதிர்

1. M/s [illegible], அதன் சார்பாக உரிமையாளர்: [illegible], மதுரை-625001
2. [illegible], மதுரை-625009

....பிரதிவாதிகள்

**அறிவிப்பு**

விண்ணப்பதாரர் வங்கி-க்கு சேர வேண்டிய தொகையை, அதற்கான தற்போதைய மற்றும் எதிர்கால ஒப்பந்த வட்டி விகிதம், செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக, மாண்புமிகு, கடன் வசூல் தீர்ப்பாயம் மதுரை-ல் **O.A. எண் 256/2026-ஐ** தாக்கல் செய்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகள், **மாண்புமிகு, கடன் வசூல் தீர்ப்பாயம் மதுரை, BSNL Level-IV கட்டிடம், முதல் தளம், CTO வளாகம், தல்லாகுளம், மதுரை - 625002 முன்பாக, 03.11.2026 அன்று காலை 10.30 மணிக்கு** நேரடியாகவோ அல்லது முறையான அறிவுறுத்தலோடு வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி பதில் தெரிவித்து விண்ணப்பத்தில் கோரப்பட்ட நிவாரணத்தினை ஏன் வழங்கக்கூடாது என்பதற்கான தங்கள் தரப்பு காரண விளக்கத்தை தாக்கல் செய்யுமாறு கோரப்படுகிறது. தவறினால், வங்கியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் விண்ணப்பமானது சட்டப்படியான முறையில் விசாரிக்கப்பட்டு நீங்கள் இல்லாத நிலையிலும் ஒருதலைபட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

S.பாபு, B.Com, B.L., MBA., வழக்கறிஞர்



**केनरा बैंक Canara Bank** भारत सरकार का उपक्रम / A Government of India Undertaking — सिंडिकेट Syndicate

பொது நிர்வாகப் பிரிவு, வட்ட அலுவலகம், வெள்ளபாண்டியன் டவர், மாட்டுத்தாவணி-சர்வேயர் காலனி 120 அடி ரோடு, மதுரை-625 007.

**வங்கிக் கிளை அமைக்க வாடகைக்கு இடம் தேவை**

| ஊர் & மாவட்டம் / பின்கோடு | சதுர அடி |
|---|---|
| **வில்லூர்,** மதுரை மாவட்டம்-625707 | 1500 சதுர அடி வரை |

மேலே குறிப்பிட்ட இடத்தில் வங்கி கிளைக்கு **Single-Bid System**-த்தின் கீழ், மெயின் ரோட்டில் உள்ள கட்டிடங்களின் உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன (தரைத் தளத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்). உடனடியாக கிளை திறக்கும் வகையில் போதுமான மின்சார வசதி, வாகனங்களை நிறுத்துவதற்கான இடவசதி மற்ற பல வசதிகளையும் கொண்டதாக இருக்க வேண்டும். விண்ணப்பத்தினை எங்களது **மதுரை மண்டல** அலுவலகத்திலோ அல்லது **மதுரை வட்ட** அலுவலகத்திலோ அல்லது எங்களது வலைத்தளம் :- **https://www.canarabank.bank.in/tenders** மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். காலி மனையில் கட்டிடம் கட்டித்தர விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம், தங்களின் விண்ணப்பங்களை **"வாடகைக்கு இடம் சம்பந்தமாக - வில்லூர்"** என்று கிளை பெயரைக் குறிப்பிட்டு முத்திரையிட்ட உறைக்குள் கட்டிட வரைபடப் பிரதியுடன் **1) வாடகை 2) ஒத்தி ஒப்பந்த காலம் & 3) வாடகை முன்பணம்** ஆகியவற்றை குறிப்பிட்டு :- **The Assistant General Manager, Canara Bank, General Administration Section, Circle Office,Vellapandiyan Tower, Mattuthavani-Surveyor Colony 120 ft Road, Madurai - 625007** என்ற முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பங்களை காரணங்கள் ஏதும் தெரிவிக்க அவசியமின்றி ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ வங்கிக்கு முழு உரிமை உண்டு. வேறேதும் மாற்றங்கள், திருத்தங்கள் இருந்தால் அவை எங்கள் வலைத்தளத்தின் மூலமே தெரிவிக்கப்படும்.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் & நேரம் : **06.11.2026** மாலை **03.30** மணிக்குள்

இல்ம் : மதுரை
நாள் : 16.10.2026

**உதவி பொது மேலாளர் மதுரை வட்டம்**



केनरा बैंक **கனரா வங்கி** — सिंडिकेट சிண்டிகேட் — ஒரு இந்திய அரசு நிறுவனம்

**மண்டல அலுவலகம் மதுரை**

**தங்க நகை ஏல அறிவிப்பு**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், அவர்களது கடன் கணக்குகளில் உள்ள கடன் பொறுப்பைத் தீர்க்க தவறிவிட்டனர். பதிவு அஞ்சல்மூலம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்புகளும் பட்டுவாடா ஆகாமல் வங்கிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. எனவே அவர்கள் **30.10.2026** அன்று அல்லது அதற்கு முன் தங்களது கடன் பொறுப்பினையும் பிற கட்டணங்களையும் சேர்த்து செலுத்தி, தங்களது அடமான நகைகளை மீட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறினால் மேற்படி தங்க நகைகள் கடன்தாரரின் செலவில் **சம்பந்தப்பட்ட கிளை வளாகத்தில் 31.10.2026** அன்று **மாலை 04.00 மணிக்கு** பொது ஏலத்தில் வங்கியால் விற்கப்படும் அல்லது வங்கியின் தனி முடிவின்படி மேல் அறிவிப்பின்றி வேறு ஒரு வசதியான தேதியில் நகைகள் விற்கப்படும்.

**குடிசேரி [09095] கிளை - PH No: 9489046391**

| வ. எண் | கடன் கணக்கு எண் | கடன் பெற்றவர் பெயர் | நகையின் மொத்த எடை (கிராமில்) | நகையின் நிகர எடை (கிராமில்) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 1 | 180362607860 | M சின்னமுத்து | 19.80 | 19.00 | 2,53,000.00 |
| 2 | 180148645380 | செல்லப்பாண்டியன் P | 8.00 | 7.50 | 1,00,000.00 |
| 3 | 164107437209 | செல்வகுமார் S | 20.40 | 20.00 | 2,67,000.00 |

குறிப்பிட்ட ஏலம் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது:

1) இது உள்ளது உள்ளபடியே என்ற அடிப்படையில் நடைபெறும் ஏலமாகும்.
2) ஏல அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச ஏல விலை (Reserve Price) ஏலம் நடைபெறும் நாளன்றுள்ள சந்தை விலையைப் பொறுத்து மாறுபடலாம்.
3) ஏலத்தில் பங்கேற்க ஏலதாரர் செலுத்த வேண்டிய முன்பண வைப்புத்தொகை (EMD) ஒரு கிளைக்கு ரூ. 25.000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
4) முன்பண வைப்புத்தொகையைச் (EMD) செலுத்தவும், தங்க நகைகளைப் பார்வையிடவும் கடைசி நாள் 30.10.2026 ஆகும்.
5) ஏலத்தில் வெற்றிபெறும் நபர் முழு ஏலத் தொகையையும் ஒரே தவணையில் செலுத்த வேண்டும்: மேலும் நகைகளைத் தனது சொந்தப் பொறுப்பிலும் அபாயத்திலும் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக அவர் வங்கியிடம் எந்தவிதமான இழப்பீட்டையோ அல்லது உரிமையையோ கோர முடியாது. தவறினால், ஏலம் ரத்து செய்யப்படும் மற்றும் முன்பண வைப்புத்தொகை (EMD) பறிமுதல் செய்யப்படும்.
6) கணக்கில் அடமானம் வைக்கப்பட்ட அனைத்து நகைகளையோ அல்லது ஏதேனும் சில நகைகளையோ தேவைக்கேற்ப ஏலத்தில் விடுவதற்கோ அல்லது எவ்வித முன்னறிவிப்பும் இன்றி எந்த நேரத்திலும் ஏலத்தை நிறுத்தி வைப்பதற்கோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு.
7) எந்தவொரு காரணத்தையும் தெரிவிக்காமலேயே எந்தவொரு ஏலத்தையும் நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு,
8) வங்கியின் வசதிக்கேற்ப எந்தவொரு நிலையிலும் ஏலத்தை எதிர்கால தேதிக்கு ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு; இதற்காக எவரும் முன்னறிவிப்பையோ அல்லது அதற்கான உரிமையையோ கோர முடியாது.
9) ஏலத்தில் வெற்றிபெற்ற நபர் ஏலத் தொகையைச் செலுத்தத் தவறினாலோ அல்லது ஏலத்தை நிறைவு செய்வதற்குத் தடையாக அமையும் வகையில் ஏலத்தை ஒத்திவைக்கவோ அல்லது புதிய ஏலத்தை நடத்தவோ வேண்டிய சூழலை உருவாக்கினாலோ, அதனால் ஏற்படும் இழப்பிற்கு அவர் வங்கிக்கு ஈடுசெய்ய (நஷ்டஈடு வழங்க) கடமைப்பட்டவர் ஆவார்.
10) ஏலம் தோல்வியுற்றால், வங்கி மற்றொரு பத்திரிகை அறிவிப்பை வெளியிட்டு, இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏலத் தேதிக்குப் பிந்தைய ஏதேனும் ஒரு தேதியில் ஏலத்தை நடத்தும்.

**ஏல விற்பனை தேதி: 31.10.2026, மாலை 4.00 மணி**
**முன்வைப்புத் தொகை: ரூ. 25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)**
**முன்வைப்புத் தொகை செலுத்துவதற்கு கடைசி நாள்: 30.10.2026**

இடம் : **மதுரை**
தேதி : **15.10.2026**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கனரா வங்கி**



**வரி விளம்பரங்கள்**

**சுய செய்தி**

**பெயர்மாற்றம்**

அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலம், நோவி நகரில் உள்ள 44896, பெயின் டிரைவ் முகவரியில் வசிக்கும் நாங்கள், ரேவதி தாசன் முத்தையா மற்றும் ராதிகா வேலாயுதம் இந்திரா, மிச்சிகன் மாநிலம், ஓக்லாந்து கவுண்டி சர்க்யூட் நீதிமன்றத்தின் ஆறாவது நீதித்துறை வட்டம் – குடும்பப் பிரிவால் 3 ஜூன், 2026 அன்று பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின்படி, எங்கள் மைனர் குழந்தையின் பெயரை மிருதக்ஷ் ரேவதி தாசன் என்பதிலிருந்து ராம் தர்ஷ் ரேவதி தாசன் என மாற்றியுள்ளோம். இனிமேல், எங்கள் குழந்தை ராம் தர்ஷ் ரேவதி தாசன் என்றே அறியப்படும்.

**NAME CHANGE**

I, PANDISELVAM SUBBRAMANIYAN S/o. Subbramaniyan born on 10.04.1968 (Native district: Sivagangai) Residing at door no: 3/578-1, Sakthi Nagar 2nd Street, 1st Cross Street, Surveyor Colony, K.Pudur, Madurai City - 625007, Tamilnadu shall henceforth be known as PANDISELVAM SUBRAMANIAN S/o. SUBRAMANIAN.

Pandiselvam Subbramaniyan
S/o. Subbramaniyan
(Old Name)
Madurai, 15th October 2026

**பொது**

**விற்பனை**

BMG BEST MONEY GOLD
மார்க்கெட் விலைக்கு தங்கம், வெள்ளி விற்க
தென்னிந்தியா முழுவதும் கிளைகள்
97502 97502



**பாங்க் ஆஃப் பரோடா** बैंक ऑफ़ बड़ौदा **Bank of Baroda**

**திண்டுக்கல் பிரதான கிளை**
23, புதிய அக்ரஹாரம், பழனி ரோடு, திண்டுக்கல் — 624001
தொலைபேசி: 0451—2431839 & 2431290
Email: **dindig@bankofbaroda.bank.in**

**மின்னணு ஏல அறிவிப்பு** — **அசையா சொத்துக்கள் விற்பனைக்கான இ - ஏல அறிவிப்பு**

**பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 6(2) & 8(6)க்கான விதியின் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்கிலிருந்து / கணக்குகளிலிருந்து நிலுவைத்தொகையை திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / கடனீட்டுச் சொத்து/கள் / நிலுவைகள் / குறைந்தபட்ச விலை / மின்னணு ஏல தேதி மற்றும் நேரம், முன்வைப்புத்தொகை, ஏல உயர்வுத்தொகை ஆகியவை பின்வருமாறு:

**கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி:** 1. **திரு. முத்து விநாயகம் R (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்)**, பிளாட் எண். 29, ஸ்ரீ மருதம் லட்சுமி இல்லம், திருப்பதி ஸ்ரீ, பாலாஜி நகர், செட்டிநாயக்கன்பட்டி, திண்டுக்கல் - 624 004, 2. **திருமதி. கோமதி M (இணை கடன்தாரர்)**, பிளாட் எண். 29, ஸ்ரீ மருதம் லட்சுமி இல்லம், திருப்பதி ஸ்ரீ, பாலாஜி நகர், செட்டிநாயக்கன்பட்டி, திண்டுக்கல் - 624 004.

மொத்த நிலுவைத் தொகை : **15.10.2026 தேதிப்படி ரூ. 31,47,670.42** (ரூபாய் முப்பத்து ஒரு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து அறுநூற்று எழுபது மற்றும் நாற்பத்து இரண்டு பைசா மட்டும்) + **16.10.2026** முதல் ஒப்பந்த விகிதப்படியான கூடுதல் வட்டி மற்றும் இதர செலவுகள் போன்றவை — **நேரடி சுவாதீனம்**

**அசையாச் சொத்தின் விரிவான விவரம், ஏதேனும் அறியப்பட்ட வில்லங்கங்கள் இருப்பின் (உரிமையாளர்/ அடமானதாரர் பெயர்):**

திண்டுக்கல் பதிவு மாவட்டம், திண்டுக்கல் இணை 2 சார் பதிவு மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, செட்டிநாயக்கன்பட்டி கிராமம், பழைய சர்வே எண். 407/1, பழைய சர்வே எண். 407/1A1A, புதிய சர்வே எண். 407/66 "திருப்பதி ஸ்ரீ பாலாஜி நகர்", மனை எண் 29இன் கிழக்கு மேற்காக வடக்கில் 28½ அடி, தெற்கில் 28 அடி, வடக்கு தெற்காக மேற்கில் 45 அடி, கிழக்கில் 47 அடி ஆக மொத்தம் 1299½ சதுர அடி அதனுடன் கட்டிடம் கட்டப்பட்ட நிலச் சொத்து அதன் துண்டுகளும் பகுதிகளும். **அதன் எல்லைகள்: கிழக்கு:** சர்வே எண். 407/2அன் நிலம், **தெற்கு:** மனை எண். 30, **மேற்கு:** மனை எண். 28, **வடக்கு:** 20 அடி அகல கிழக்கு மேற்கு சாலை.

வங்கிக்கு தெரிந்து வில்லங்கம் ஏதுமிருப்பின்: **இல்லை.**

இச் சொத்து **திரு. முத்து விநாயகம் R** பெயரில் உள்ளது.

அட்சரேகை: 10.394342 & தீர்க்கரேகை: 77.953568

BAANKNET சொத்து ID: **BARB254620260001**

| குறைந்தபட்ச விலை | முன்வைப்புத் தொகை | ஏல உயர்வுத் தொகை |
|---|---|---|
| ரூ. 57,60,000/- | ரூ. 5,76,000/- | ரூ. 50,000/- |

| ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம் : | ஏலத் தேதி மற்றும் நேரம் : |
|---|---|
| 16.11.2026 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை | 18.11.2026; பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை |

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை **https://www.bankofbaroda.bank.in/e-auction.htm** மற்றும் **https://baanknet.com** பார்க்கவும். மேலும் விலைக்குறிப்பீட்டாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். **7871955596**. மூலம் தொடர்பு கொள்ளலாம்.

இடம் : திண்டுக்கல்
தேதி : 15.10.2026

**முதன்மை மேலாளர் & அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பாங்க் ஆஃப் பரோடா**



இந்து தமிழ் திசை

[illegible] நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.


எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Narayanan Santhanam, at Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).

MA-MA